பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 15 வியாழக்கிழமை 28.05.2020 கதிர் 72

# மேலும் 3 மாதங்களின் பின்பே பொதுத்தேர்தல்

## அமைச்சரவையில் கோட்டா கவலையுடன் தெரிவிப்பு

“நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற இன்னமும் மூன்று மாதங்கள் செல்லும் என நான் நினைக்கின்றேன். ஏனெனில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவின் கருத்துக்களைப் பார்க்கும்போது இவ்வாறு எண்ணத் தோன்றுகின்றது.

- இப்படிக் கவலையுடன் தெரிவித்தார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ.

2



# 693 ஆக உயர்ந்தது கடற்படை பாதிப்பு

இலங்கையில்கொரோனாவைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களில் கடற்படையினர்மற்றும்அவர்களுடன் நெருக்கமான 729 பேர் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதில் 693 கடற்படையினர் உள்ளடங்குகின்றனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட கடற்படையினரில் 344 பேர் குணமடைந்துள்ளனர் என்றும், 349 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## பெல்ஜியத்திலிருந்து 43 பேருடன் வந்த விமானம் மத்தளவில் தரையிறக்கம்!

பெல்ஜியம், பிரேஸிலிருந்து 43 பயணிகளுடன்வருகைதந்தபோயிங் 737 விமானம், மத்தள சர்வதேச விமான நிலையத்தில் இன்று தரையிறங்கியுள்ளது.

(விரிவான செய்தி 06 ஆம் பக்கத்தில் )

## தேர்தல் மனுக்கள் மீதான விசாரணை 8ஆவது நாளாக மீண்டும் ஒத்திவைப்பு

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் வர்த்தமானி அறிவிப்பு, தேர்தல்கள் ஆணைக் குழுவின் ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தல் வர்த்தமானி அறிவிப்பு ஆகிய வற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் மீதான விசாரணை நாளை காலை 10 மணி வரை மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம் திகதி முதல் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட

2

# 1,486 ஆக அதிகரித்தது கொரோனாத் தொற்று

## 731 பேர் வைத்தியசாலையில் 745 பேர் பூரண குணமடைவு

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 17 பேர் இன்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதற்கமைய தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 1,486 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று ஆகக் கூடுதலாக ஒரே நாளில் 150 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். நேற்று தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களில் 97 பேர் வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பி தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் எனவும், ஏனைய 53 பேரும் கடற்படையினர் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

இதுவரை தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளவர்களில் 731 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். 745 பேர் தொற்றிலிருந்து

2

## மே 31, ஜூன் 4,5 நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்

கொழும்பு, மே 28

நாடு முழுவதும் வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மற்றும் ஜூன் 4,5ஆம் திகதிகளில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் நாளை மறுதினம் சனிக்கிழமை இரவு 10 மணிக்குநடைமுறைப்படுத்தப்படும் ஊரடங்குச் சட்டம் ஜூன் முதலாம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்படும்.

மற்றைய நாள்களில் தினமும் அதிகாலை 4 மணிக்கு தளர்த்தப்படும் ஊர டங்குச் சட்டம் இரவு 10 மணிக்கு மீள நடைமுறைப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு இன்று வெளியிட்ட சிறப்பு ஊடக அறிவித்தலில் தெரிவித்துள்ளது.

2

## கேப்பாபுலவு முகாமில் மூவருக்கு கொரோனா

முல்லைத்தீவு, மே 28

கேப்பாபுலவு விமானப்படை தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கடற்படையினரில் மேலும் மூவர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

ஏற்கனவே அந்த முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த கடற்படையினர் 15 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில் அங்கு தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களில் தொற்றுக்கு உள்ளானவர்கள் எண்ணிக்கை 18 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தககது.



## கிளிநொச்சி விபத்து; தாயார் சாவு! மகள் காயம்!!

கிளிநொச்சி, மே 29

கிளிநொச்சியில் இடம்பெற்ற வாகன விபத்தில் தாய் உயிரிழந்துள்ளமையுடன், மகள் படுகாயமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து இன்று வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பரந்தன் - பூநகரி வீதியில் இடம்பெற்றுள்ளது.

பூநகரி திசையிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது கிளிநொச்சியிலிருந்து யாழ். நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

2

## குரும்பசிட்டி கிணறு ஒன்றில் பெருமளவு வெடிபொருள்கள்!



### அதிரடிப் படையினர் மீட்டனர்

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மே 28

வலி வடக்கு குரும்பசிட்டிப் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து பெருமளவு வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கிணற்றைச் சுத்தம் செய்யும் நடவடிக்கைஇன்றுமேற்கொள்ளப்பட்டது.

இதன்போது அதற்குள் பெருமளவு வெடிபொருள்கள் இருப்பது அவதானிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விசேட அதிரடிப் படையினருடன் வந்த பொலிஸார் அங்கிருந்த வெடிபொருள்களை மீட்டுள்ளனர்.

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டம் திங்கள் 1,200 ஆவது நாளில்!





பாரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர் என காணாமல் ஆக்கப்பட்ட உறவினர்களின் சங்கத்தலைவி கா.ஜெயவனிதா தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் கடந்த 1196 நாட்களாக போராட்டம் மேற்கொள்ளும் இவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை இந்தப் போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளனர்.

வவுனியாவில் இன்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நூறு நாள் வேலைத்திட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரம் ஒன்றில் எனது மகளான ஜெரோமி உட்பட நான்கு பேர் உள்ளனர்.

இன்று எனது மகளின் பிறந்ததினம். ஒவ்வொருபிறந்தநாளிலும்எனதுபிள்ளைஎன்னிடம் வரும் என்று எண்ணி இன்று தெருவோரத்தில் இருந்து கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிறேன்.

அந்தக் கண்ணீர் 11 வருடங்களாக நீண்டு செல்கின்றது. எமது வேதனையைத் தீர்ப்பதற்கு யாரும் முன்வரவில்லை.

அனைவரது வாக்குறுதிகளும் எமக்கு ஏமாற் றமாகவே போய்விட்டன. எனது பிள்ளை என்னிடம் வரும் வரைக்கும் இந்த போராட்டத்தை தொடர்ந்து கொண்டே இருப்பேன்.

அத்துடன் எமது போராட்டம் எதிர்வரும் திங்கட்கிழமை 1200ஆவது நாளை எட்டுகின்ற நிலையில் மாபெரும்கவனயீர்ப்புபோராட்டம்ஒன்றைமுன்னெடுக்கவுள்ளோம். - என அவர் தெரிவித்துள்ளார்.

# மரணவீடுகளிலும் கட்டுப்பாடுகள் 'காட்ஸ்', வெற்றிலைக்குத் தடை

## புதிய விதிமுறைகள் அறிவிப்பு

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் குறைகின்ற நிலையில், மரண இறுதிச் சடங்கின்போது பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

மரண இறுதிச் சடங்கின்போது குடும்ப அங்கத்தவர்கள் மட்டும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவதாகவும், அனைவருமே முகக் கவசம் அணிவது கட்டாயம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரண வீடு மற்றும் இறுதிச் சடங்கு இடம்பெறும் களத்தில் கைகளைக் கழுவுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். கதிரைகளை இடும்போது குறைந்தது ஒரு மீற்றர் தூரம் இடைவெளி கொடுக்கப்பட வேண்டும்.

மரண வீட்டில் டாம், கரம், செஸ், காட்ஸ் போன்ற விளையாட்டுக்களும் தடை செய்யப்பட்டுள்ளன. அதேபோல மது பாவனை, வெற்றிலை இடுதலும் தடை செய்யப்பட்டிருக்கின்றது.

மேலும் மரண வீட்டில் அடிக்கடி கைகள் தொடும் இடங்களில் தொற்றுநீக்கும் திரவம் தெளிக்கப்பட வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# டிப்பர் – ஓட்டோ மோதி விபத்து கந்தளாயில் இருவர் படுகாயம்

திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய் -சேருவில பிரதான வீதியில் இன்று பகல் டிப்பர் வாகனமொன்றும், முச்சக்கர வண்டியொன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் கந்தளாய் தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என ஜயந்திபுர பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கந்தளாய்ப் பகுதியைச் சேர்ந்த 45 மற்றும் 48 வயதுடைய இருவரே கந்தளாய் தள வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கந்தளாயில் இருந்து சேருவில விற்கு சென்ற முச்சக்கர வண்டியும், மணல் ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனமுமே இவ்வாறு மோதியுள்ளன எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இவ்விபத்துச்சம்பவம்தொடர்பான மேலதிக விசாரணைகளை ஜயந்திபுர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மே 31, ஜூன் 4,5 நாடு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும், ஜூன் முதலாம் திகதி முதல் 3ஆம் திகதி வரை நாடு முழுவதும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை மாத்திரமே ஊரடங்கு நடைமுறையில் இருக்கும்.

அத்துடன், ஜூன் 4ஆம் திகதி மற்றும் 5 ஆம் திகதி ஆகிய இரு நாள்களிலும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கும்.

ஜூன் 6ஆம் திகதி சனிக்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை நாடு முழுவதும் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை மாத்திரமே ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்கு தொடர்ந்தும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## கிளிநொச்சி விபத்து: ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கிளிநொச்சியைச் சேர்ந்த 64 வயதுடைய சுப்ரமணியம் அன்ன லட்சுமி என்ற வயோதிபப் பெண் உயிரிழந்தார். மோட்டார் சைக்கிளைச் செலுத்திய அவரது மகள் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காகக் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

டிப்பர் வாகனம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன், சாரதியைக் கைது செய்துள்ள கிளிநொச்சி பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# அர்ஜுன மகேந்திரன் இப்போது பெயர் மாற்றித் தலைமறைவாம்!



இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரான அர்ஜுன மகேந்திரன், பெயர் மாற்றம் செய்து அர்ஜுன் அலெக்ஸன்டர் என்கிற பெயரில், தலைமறைவாக இருக்கிறார் என சர்வதேச பொலிஸார் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

இதனால் ஏற்கனவே அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள, சர்வதேச சிவப்பு பிடியாணையை அர்ஜுன் அலெக்ஸன்டர் என்கிற பெயருக்கு மாற்றியமைத்து தருமாறும் சர்வதேச பொலிஸார் இலங்கையிடம் கோரியிருக்கின்றது.

## தேர்தல் மனுக்கள் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த மனுக்கள், 8ஆவது நாளாக இன்று காலை 10 மணியளவில் பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிகாரே, சிசிர டி அப்ரூ, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட ஆகிய ஐவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டன.

நேற்று சுமார் 3 மணி நேர விசாரணையை அடுத்து அது 8ஆவது தடவையாக நாளை வரை மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## 1,486 ஆக அதிகரித்தது ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணமடைந்துள்ளனர். அத்துடன் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மேலும் 68 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் வைத்தியசாலைகளில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# நாடு திரும்பி வந்தவர்களில் 385 பேருக்குக் 'கொரோனா'

கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பிதனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டவர்களில் இதுவரை 385 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்று மட்டும் 97 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு இன்று பிற்பகல் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

## மேலும் 3 மாதங்களின் பின்பே ..............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உயர்நீதிமன்றத் தீர்ப்பு வந்து 9 தொடக்கம் 11 வாரங்களுக்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் கூறியுள்ளார். அப்படியாயின் எப்படியோ இன்னும் மூன்று மாதங்களுக்குத் தேர்தல் இழுபடப் போகின்றது.

ஏற்கனவே மூன்று மாதங்கள் இழுபட்டதால் மொத்தமாக 6 மாதங்கள் நாட்டின் பணிகள் தடைப்பட்டுக் கிடக்கும் நிலைமை உருவாகியுள்ளது - என்றார்.

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் வகையில் நாடளாவிய ரீதியில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டத்தால் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கும் விடயத்தில் எதிரணியினர் குற்றஞ்சாட்டுவது போன்று எந்தவித அரசியல் தலையீடுகளும் இல்லை. சில அதிகாரிகளே ஒத்துழைப்பை வழங்க மறுக்கின்றார்கள் - என்றும் ஜனாதிபதி இதன்போது மேலும் கூறினார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## படுத்துறங்கும் ஜனநாயகம்

இலங்கையில் பொதுத் தேர்தல் கிணற்றில் போட்ட கல் என்ற நிலைமையை எட்டி விட்டது போலவே தோன்றுகின்றது.

பொதுத் தேர்தல் விவகாரம் உயர்நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்படுகின்றது. அதன் முடிவு வந்துதான் எந்த நடவடிக்கையும் என்று கைவிரித்து விட்டது தேர்தல் ஆணையம். நீதிமன்ற முடிவு வரும் வரை எதுவும் பேசமாட்டோம், எந்த முடிவும் கூற மாட்டோம், எந்தக் கருத்தும் தெரிவிக்க மாட்டோம் என்று தீர்மானம் செய்து விட்டது சுயாதீன தேர்தல் ஆணையம்.

அதன் கருத்துப்படி தேர்தல் நடத்துவது தொடர்பான பந்து உயர்நீதிமன்றத்தின் களத்தில். உயர் நீதிமன்றம் அந்தப் பந்தை எப்படி விளையாடுகின்றது என்பதில்தான் அந்த விடயத்தின் போக்கு அமைந்திருக்கும் எனத் தீர்மானித்து விட்டது தேர்தல் ஆணையம்.

ஆனால் , நீதிமன்றமோ, இன்றைய நிலை வரை விவகாரத்தை சாவதானமாக – மிக ஆறுதலாக – கையாள்கின்றது. எந்த அவசரமும் காட்டவில்லை.

தேர்தல் விடயத்தை ஒட்டித் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பில் கடந்த எட்டு நாள்களாகப் பல தரப்பு சட்டத்தரணிகளினதும் நீண்ட வாதங்களை அதிக குறுக்கீடுகளின்றிச் செவிமடுத்து வருகின்றது உயர் நீதிமன்றம். நாளை ஒன்பதாவது நாள் விசாரணை. வெள்ளிக்கிழமையான நாளை மாலை 4.30 மணி வரை விசாரணை நீடிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை ஒட்டித் தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனுதாரர்களின் கருத்துக்களை நீதிமன்றம் செவிமடுத்து வருகின்றது. நேற்று மேலதிக சொலிஸிட்டர் ஜெனரல் தமது ஒன்றரை நாள் வாதத்தை முடித்ததும் மூன்று இடையீட்டு மனுதாரர்களின் சட்டத்தரணிகள் தமது வாதத்தை முன் வைத்தனர். இன்று நான்கு மனுதாரர்களின் சட்டத்தரணிகள் வாதங்களைச் சமர்ப்பித்தனர். நாளை இன்னும் மூன்று இடையீட்டு மனுதாரர்களின் சட்டத்தரணிகள் வாதிடவிருக்கின்றனர். அதைத் தொடர்ந்து மனுதாரர்களின் சட்டத்தரணிகள் பதிலுரை வழங்க வேண்டும். மனுதாரர்கள் ஏழு பேர் சார்பில் ஒரேயடியாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் பதிலுரை வழங்கவிருக்கின்றார். அவர் ஏற்கனவே தமது பதிலுரைக்கு ஒரு முழுநாள் கோரியிருக்கின்றார். இந்தப் பின்புலத்தில் இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பது பற்றிய பூர்வாங்க விசாரணை நாளையுடன் முடியுமா, சனிக்கிழமை அல்லது திங்கட்கிழமைக்குத் தொடருமா என்பது தெரியவில்லை.

இந்த மனுக்களை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்குமாயின் அதற்குப் பின்னர் எதிர்மனுதாரர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி, மூல விசாரணை நடைபெற்று, தீர்ப்பு வர மாதங்கள் சென்றாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. பூர்வாங்க விசாரணையே இப்படி நீளும்போது மூல விசாரணை பற்றிக் கூறத் தேவையில்லை.

அப்படித் தீர்ப்பு வந்தாலும் அதற்குப் பின்னர் தேர்தல்கள் நடத்துவதற்கு 9 முதல் 11 வாரங்கள் தேவை என்று தேர்தல் ஆணையம் கோரியிருக்கின்றது. இந்த நிலைமையில் அடுத்த மூன்று முதல் ஆறு மாதங்களுக்குப் பின்னர்தான் தேர்தல் சாத்தியமாகும் சூழ்நிலை தென்படுகின்றது.

அதுவும் கூட, அச்சமயத்தில், உலகின் பிற நாடுகள் சிலவற்றில் ஏற்பட்டமை போல கொரோனாத் தொற்றின் இரண்டாம் கட்டம் பேரலையாகத் தாக்காமல் இருக்க வேண்டும்.

தேர்தல் மேலும் காலதாமதப்பட்டு இழுபடப் போகின்றது என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷகூடவே நேற்று அமைச்சரவைக் கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

அதுதான் நிலைமை என்றால் இந்த நாடு ஆறு மாதங்களுக்கு மேல் நாடாளுமன்றமே இல்லாத நாடாக இயங்கப் போகின்றது.

ஏற்கனவே மாகாண சபைகள் செயழிந்து வருடக் கணக்காகி விட்டன. மாகாண சபைகள் எல்லாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளால் நிர்வகிப்பட்ட காலம் மலையேறி விட்டது. ஜனாதிபதியின் பிரதிநிதிகளான ஆளுநர்களின் ஆட்சிதான் அங்கு நடக்கின்றது.

ஆறு மாதங்களுக்கு மேல் நாடாளுமன்றம் முடங்கிக் கிடக்க, அதன் பணியையும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டில் காபந்து அமைச்சரவை முன்னெடுக்கின்றது.

நாட்டின் பெயரோ ‘இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு’. ஆனால் நாட்டில் மக்கள் பிரதிநிதித்துவத்தைப் பிரதிபலிக்கும் ஜனநாயகம் படுத்துறங்கி நீண்ட காலமாகி விட்டது.

ஜனநாயக முறையில் தெரிவான தனிமனிதரின் – நிறைவேற்றதிகார ஜனாதிபதியின் – சர்வாதிகார ஆட்சிதான் இங்கு ஜனநாயகத்தின் பெயரால் தொடரப் போகின்றது போலும்.

# தோட்ட மக்களிடையே பயங்கரவாதத்தை அனுமதிக்காத பெருமை ஆறுமுகனுக்கே!

## பிரதமர் மஹிந்த புகழாரம்



கொழும்பு, மே 28

தோட்ட மக்களிடையே பயங்கரவாதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை அனுமதிக்காத பெருமை மறைந்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானையே சாரும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவையிட்டு அவர் இன்று வியாழக்கிழமை வெளியிட்டுள்ள இரங்கல் அறிக்கையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் - அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவையிட்டு ஒட்டுமொத்த பெருந்தோட்ட மக்களுக்கும் நான் தனிப்பட்ட ரீதியில் வருத்தத்தை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவர் இறப்பதற்குச் சில மணி நேரங்களுக்கு முன்னர் என்னைச் சந்தித்து இறுதியாகக் கலந்துரையாடிய தருணத்தை என்னால் மறக்க முடியாது.

என்னைச் சந்தித்து இறுதியாக உரையாடிய அந்தத் தருணத்திலும் தனது மக்கள் தொடர்பாகவே கவனம் செலுத்தியமையை நான் பெரிதும் மதிக்கின்றேன்.

கொவிட் - 19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை விரைவாக இயல்பு நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென தனது வாழ்க்கையின் இறுதித் தருணத்தில் என்னுடன் கலந்துரையாடியமையை நான் நினைவு கூருகின்றேன்.

தொண்டமான் பரம்பரைக்கும் பெருந்தோட்ட மக்களுக்கும் இடையில் ஒரு வலுவான உறவு காணப்படுகின்றது. ஆறுமுகம் தொண்டமானின் பாட்டனார் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலத்திலிருந்தே தமது மக்களுக்குச் சேவை செய்துள்ளனர். அவர்கள் செய்த தியாகங்களின் பிரதிபலனாகவே தற்போது தோட்டத் தொழிலாளர்கள் பல சலுகைகளை அனுபவிக்கின்றனர்.

குறிப்பாக பெருந்தோட்டத் துறையினருக்கு குடியுரிமை வழங்குவதிலும் அவர்கள் இந்நாட்டின் குடிமக்களாக வாழவும் தொண்டமான் பரம்பரையினர் மகத்தான சேவையை செய்துள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மறைந்த தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஜனநாயகத்தை பாதுகாக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

தோட்ட மக்களிடையே பயங்கரவாதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை அனுமதிக்காத பெருமை ஆறுமுகம் தொண்டமானையே சாரும். பயங்கரவாதத்திற்கு எதிரான போரின்போது, நாட்டை பிளவுபடுத்தும் சக்திகளுக்கு எதிராக ஒரு ஜனநாயக தலைவராக அரசுக்கு அவர் வழங்கிய ஆதரவு மிக முக்கியமானது.

மக்களை வழி நடத்தும் தத்துவார்த்த கனவுகளுடன் செயற்பட்டாரே தவிர, பிரிவினைவாதத்தை விதைத்து வாக்குகளை பெறும் கொள்கை அவருக்கு இருக்கவில்லை.

அவரது பகுதியிலுள்ள சகல சமூகத்தினரதும் ஆதரவு அவருக்கு காணப்பட்டது. பெருந்தோட்ட தமிழ் மக்களிடையே இன, மத வேறுபாடுகள் அற்ற உன்னத மனிதர்கள் இருக்கின்றனர் என்பதை அவர் உலகிற்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

தனது மக்களின் வாழ்வியல் தேவைகளை பூர்த்தி செய்யும்போது அவர்களின் வாழ்க்கையை பாதுகாப்பானதாகவும் வசதியாகவும் மாற்றுவதற்கான தூரநோக்கு சிந்தனை அவரிடம் காணப்பட்டது.

தோட்டப் பகுதிகளுக்கு வீடுகள், சிறந்த வேலைவாய்ப்பு, சம்பளம், நெடுஞ்சாலைகள், மின்சாரம் மற்றும் பல்கலைக்கழகம் போன்றவற்றை பெறுவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.

தோட்ட மக்களை அவர் ‘எமது மக்கள்’ என்ற சகோதர உணர்வுடனேயே எப்போதும் அழைப்பார். எமக்கும் அவருக்கும் நீடித்த சிறந்த நட்பு காணப்பட்டது.

ஆகையால் அமரர் ஆறுமுகம் தொண்டமானை வேதனையுடன் நினைவு கூருகின்றோம். அவரின் நினைவை என்றும் எம் இதயத்தில் வைத்திருப்போம் - என்றுள்ளது.

# வீதியால் சென்ற பெண்ணுக்குப் பாலியல் தொல்லை கொடுத்தவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், மே 28

வீதியால் சென்ற பெண்ணுக்கு வார்த்தைகளாலும் சைகைகளாலும் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மடம் வீதியில் நடந்து சென்ற 30 வயதுடைய பெண் ஒருவரை நோக்கி வார்த்தைகளாலும் சைகளாலும் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டார்.

பாதிக்கப்பட்ட பெண் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலும் அவரது மைத்துநர் வழங்கிய வாக்குமூலத்தில் அடிப்படையிலும் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்று புதன்கிழமை முற்படுத்தப்பட்டார்.

1993ஆம் ஆண்டு திருத்தப்பட்ட இலங்கை தண்டனைச் சட்டக்கோவை 345ஆம் பிரிவின் கீழ் பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ் மன்றில் பி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல், சந்தேக நபரை நாளை வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# அரிசி விலையில் மீண்டும் மாற்றம்

கொழும்பு, மே 28

அரிசி விற்பனைக்கான அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நேற்று பிரதான அரிசி ஆலை உரிமையாளர்களுடன் ஜனாதிபதி பேச்சு நடத்திய பின்னர், அரிசி வகைகளின் அதிக பட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டு, வெளியிடப்பட்டிருந்தது.

நேற்றிரவு அது தொடர்பான வர்த்தமானி வெளியாகுமென குறிப்பிடப்பட்டிருந்தபோதும், நேற்று வர்த்தமானி வெளியாகவில்லை.

இந்த நிலையில், நேற்று அறிவிக்கப்பட்ட விலைகளிலும் திருத்தம் செய்யப்பட்டு, அதிக பட்ச சில்லறை விலைக்கான புதிய பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, கீரிச்சம்பா ஒரு கிலோ - 120 ரூபா, சம்பா ஒரு கிலோ 98 ரூபா, வெள்ளைப் பச்சையரிசி ஒரு கிலோ 96 ரூபா, சிவப்பு பச்சையரிசி ஒரு கிலோ 93 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# கொரன்டைன்', 'சானிடைசர்' இது குழந்தைகள் பெயர்தான்

கொரோனா காலத்தின் இணைபிரியாத தனிமைப்படுத்தல் மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றின் நினைவாக தங்கள் இரட்டை குழந்தைகளுக்கு 'கொரண்டைன்'மற்றும் 'சானிடைசர்' என்று பெயர் சூட்டியுள்ளனர் உத்தரபிரதேசப் பெற்றோர்.

கொரோனா வைரஸ் உயிரிழப்புகளும், பாதிப்புகளும், ஊரடங்குச் சிக்கல்களும் தொடரும் இந்த நேரத்தில் சில விசித்திர நிகழ்வுகளும் நடந்து வருகின்றன.

உத்தரபிரதேச மாநிலம் மீரட்டில் ஒரு தாய் இரட்டை குழந்தைகளைப் பெற்றெடுத்தார். கொரோனா காலத்தின் இணைபிரியாத தனிமைப்படுத்தல் மற்றும் கிருமிநாசினி ஆகியவற்றின் நினைவாக தங்கள் இரட்டை குழந்தைகளுக்கு 'கொரண்டைன்' மற்றும் 'சானிடைசர்' என்று அவர்கள் பெயர் சூட்டியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கூறும்போது, "இந்த இரண்டு பெயர்கள், கொரோனா வைரசுக்கு எதிராக மனிதர்களுக்குப் பாதுகாப்புத் தருவதற்கு முக்கியமாகும். இதுதான் சிறந்த பெயர்களாக இருக்க முடியும் என்று எங்கள் குழந்தைகளுக்கு இவற்றைத் தேர்வுசெய்தோம். அதனால்தான் எங்கள் ஆண் குழந்தைகளுக்கு இந்தப்பெயர்களைச்சூட்டியுள்ளோம்" என்றனர்.

# குதிரைக்கும் தனிமைப்படுத்தல்

## ஜம்முவில் சுவாரஸ்யம்

இந்தியாவின் ஜம்மு மாநிலத்தில் உரிமையாளரைச் சுமந்து வந்த குதிரையை அதிகாரிகள் தனிமைப்படுத்திய ருசிகர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

குதிரையை தனிமைப்படுத்திய அதிகாரிகள் – ஜம்முவில் நடந்த ருசிகர சம்பவம்.

'தனிமைப்படுத்துதல்' என்ற வார்த்தை கொரோனாவால் தற்போது பிரபலமாகி உள்ளது. இதுவரை மனிதர்கள் தான் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு வந்தனர். தற்போது, முதல் முறையாக ஒரு குதிரை தனிமைப்படுத்தப்பட்டு உள்ளது.

காஷ்மீரின் சோபியான் உள்ளிட்ட 10 மாவட்டங்கள் கொரோனா பாதிப்பு அதிகமுள்ள சிவப்பு மண்டலப் பகுதிகளாக உள்ளன. இங்கிருந்து மற்ற பகுதிகளுக்கு செல்ல மாவட்ட நிர்வாகத்திடம் முறையான அனுமதி பெற வேண்டும். இந்த நிலையில், ஜம்மு பிராந்தியத்தில் உள்ள ரஜோரி பகுதியைச் சேர்ந்த ஒருவர், சோபியான் மாவட்டத்தில் இருந்து தனது குதிரையில் சவாரி செய்த படி ரஜோரிக்கு வந்துள்ளார். இவர் அதிகாரிகளிடம் எந்த முன்அனுமதியும் பெறவில்லை.

கடந்த திங்கட்கிழமை இரவு குதிரையில் புறப்பட்ட அந்த நபர் முகல் சாலை வழியாக ரஜோரியை வந்தடைந்துள்ளார். கடும் குளிர் காரணமாக அந்தச் சாலை மூடப்பட்ட நிலையில், எந்த வாகன தொந்தரவும் இல்லாமல் குதிரையில் மகிழ்ச்சியாக சவாரி செய்துள்ளார். பச்சை மண்டலமான ரஜோரியை வந்தடைந்ததும் மாவட்ட எல்லையிலேயே அவரை தடுத்து நிறுத்திய பொலிஸார் உடனே, குதிரையையும், உரிமையாளரையும் கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

**தனிமைப்படுத்தப்பட்டுள்ள குதிரை**

இதன் முடிவு வரும் வரை உரிமையாளர், தனிமை மருத்துவ விடுதியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார். மருத்துவ அறிக்கை வரும் வரை வீட்டில் மற்ற விலங்குகளிடமிருந்து குதிரையை தனிமைப்படுத்தி வைக்க வேண்டுமென வும் அதன் உரிமையாளரின் குடும்பத்தினரிடம் மருத்துவர்கள் அறிவுறுத்தினர். இதனால் வாயில் பொலித்தீன் போட்டு மூடப்பட்ட நிலையில், லாடத்தில் தனியாக கட்டி, 'தனிமைப்படுத்தலில்' குதிரை தற்போது உள்ளது.



# இணையம் மூலமான மது விற்பனை கேரளாவில் இன்று முதல் ஆரம்பம்!

இந்தியாவின் கேரளா மாநிலத்தில் இன்று முதல் இணையம் மூலம் மது விற்பனை தொடங்கியது. திறன்பேசி (ஸ்மார்ட் போன்) இல்லாதவர்கள் எஸ்எம்எஸ். மூலம் முன்பதிவு செய்து மதுபானம் வாங்கி கொள்ளலாம் என அதிகாரிகள் தெரிவித்துஉள்ளனர்.:

கேரளாவில் ஊரடங்கு நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து அங்கு செயல்பட்டு வந்த மதுக்கடைகளும் மூடப்பட்டன.

ஊரடங்கில் தளர்வு அறிவிக்கப்பட்ட பின்னரும் கேரளாவில் மதுக்கடைகள் திறக்கப்படாமல் இருந்தன. கடைகளை திறந்தால் கூட்டம் அலைமோதும் என்பதாலும், நோய் பரவும் அபாயம் உருவாகும் என்பதாலும் மதுக்கடைகளைத் திறக்க மாநில அரசு தயக்கம் காட்டியது.

இதற்குத் தீர்வு காண அதிகாரிகள் இணையம் மூலம் மது விற்பனை செய்ய ஏற்பாடு செய்தனர். இதற்காகத் தனியார் நிறுவனம் மூலம் ஆப் ஒன்றை உருவாக்கினர். பெவ் கியூ என்ற இந்த ஆப்பை கூகுள் பிளே ஸ்டோர் மூலம் பதிவிறக்கம் செய்து அதில் வாடிக்கையாளர்கள் மது கேட்டு பதிவு செய்யலாம்.

பெவ் கியூ ஆப்புக்கு கூகுள் பிளே ஸ்டோர் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியது. இந்த ஆப்பை பயன்படுத்தி இன்று முதல் கேரளாவில் மதுபானங்கள் வாங்கிக் கொள்ளலாம்.

வாடிக்கையாளர் இந்த ஆப்பில் பதிவு செய்ததும் அருகில் உள்ள கடையில் மது வாங்குவதற்கான டோக்கன் வரும். அதனைக் காண்பித்து வாடிக்கையாளர் அந்த கடையில் மது வாங்கி கொள்ளலாம்.

ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு முறை 3 லிற்றர் மதுபானமே வழங்கப்படும். அதே நபர் அடுத்த 4 நாள்களுக்கு இந்த ஆப் மூலம் மது வாங்க முடியாது.

திறன்பேசி (ஸ்மார்ட் போன்) இல்லாதவர்கள் எஸ்.எம்.எஸ். மூலம் முன்பதிவு செய்து மதுபானம் வாங்கி கொள்ளலாம் என கலால் துறை அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர். இதன் மூலம் மதுக்கடைகளில் தேவையின்றி கூட்டம் கூடாது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

# கட்டுமான இடிபாடுகளுக்குள் சிக்கி மூன்று குழந்தைகள் சாவு

## பட்னாவில் நேற்றுச் சோகம்

இந்தியாவின் பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவில் கட்டுமானப் பணியின் போது கற்தூண்கள் விழுந்து 3 குழந்தைகள் உயிரிழந்தனர்.

ஜவகர்லால் நேரு மார்க் பகுதியில் கட்டுமான பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. நேற்று காலை தூக்கி நிறுத்தப்பட்டிருந்த கற்தூண்கள் திடீரென இடிந்து கீழே விழுந்தன. அதன் கீழே 3 குழந்தைகள் சிக்கிக் கொண்டனர்.

உடனடியாக அந்த குழந்தைகளை மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளித்தனர்.

ஆனால், 3 குழந்தைகளுமே பரிதாபமாக உயிரிழந்துவிட்டனர் என்று மருத்துவர்கள் அறிவித்தனர்.

உயிரிழந்த 3 குழந்தைகளின் குடும்பத்தினருக்கும் தலா 4 லட்சம் ரூபாய் நிவாரணம் அளிக்கப்படும் என தெரிவித்தார் பாட்னா மாவட்ட ஆட்சியர் ரவிகுமார்.

# கொரோனா பெருந்தொற்று 1.58 லட்சமாக உயர்ந்தது

இந்தியாவில் கொரோனா வைரசால் இதுவரை 1.58 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 531 ஆக உயர்ந்துள்ளது.

நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக நடைபெறுகின்றன. எனினும் நாடு முழுவதும் வைரஸ் உறுதிசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்புகள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

இன்று காலை மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் மொத்தம் 1 லட்சத்து 58 ஆயிரத்து 333 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் 6 ஆயிரத்து 566 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. 194 பேர் உயிரிழந்துள்ளனர். இதன் மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 4 ஆயிரத்து 531 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 67 ஆயிரத்து 692 பேர் கொரோனாப் பாதிப்பில் இருந்து குணமடைந்துள்ளனர்.

நாடு முழுவதும் பரவலாக கொரோனா தாக்கம் இருந்தாலும், மகாராஷ்டிரா, தமிழ்நாடு, குஜராத், டெல்லி ஆகிய மாநிலங்களில் பாதிப்பு மிக அதிகமாக உள்ளது. குறிப்பாக மகாராஷ்டிர மாநிலம் நோய்த்தொற்றில் தொடர்ந்து உச்சத்தில் உள்ளது.

மகாராஷ்டிராவில் கொரோனா பாதிப்பு 56 ஆயிரத்து 948 ஆக உயர்ந்துள்ளது. தமிழகத்தில் 18 ஆயிரத்து 545 பேருக்கும், குஜராத்தில் 15 ஆயிரத்து 195 பேருக்கும், டெல்லியில் 15 ஆயிரத்து 257 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

# மகாராஷ்டிராவில் ஐ.டி நிறுவன ஊழியர்களின் பணி விலக்கல்!

## ஆயிரக்கணக்கானோர் வேலையிழக்கின்றனர்

கொரோனா நெருக்கடி காரணமாக மகாராஷ்டிராவில் உள்ள ஐ.டி. நிறுவனங்கள் ஆள்குறைப்பு மற்றும் சம்பள குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதனால் ஆயிரக்கணக்கானவர்கள் வேலையிழக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. .

இந்தியாவில் கொரோனா பெருந் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலம் மகாராஷ்டிராதான்.

கொரோனா நெருக்கடி காரணமாக மாநிலத்தில் உள்ள ஐ.டி. நிறுவனங்கள் ஆள்குறைப்பு மற்றும் சம்பள குறைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக கூறப்படுகிறது.

இந்த பிரச்சினையில் தலையிட கோரி ஐ.டி. ஊழியர்களின் உரிமைகளுக்காகச் செயல்படும் தேசிய தகவல் தொழில்நுட்ப செனட் என்ற அமைப்பு முதலமைச்சர் உத்தவ் தாக்கரேவுக்கு கடிதம் எழுதி உள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

மகாராஷ்டிரா முழுவதும் பல ஐ.டி., ஐ.டி.எஸ், பி.பி.ஓ., கே.பி.ஓ. நிறுவனங்கள் எந்தவொரு நியாயமான காரணமும் இல்லாமல் ஊழியர்களைப் பணியில் இருந்து நீக்கி வருகின்றன.

மேலும் சம்பளக் குறைப்பு மற்றும் ஊழியர்களை கட்டாய விடுப்பில் அனுப்பும் நடவடிக்கையிலும் ஈடுபட்டு வருகின்றன. கொரோனா பிரச்சினைக்கு ஊழியர்கள் எந்தவகையிலும் பொறுப்பாக மாட்டார்கள். ஆனால் நிறுவன உரிமையாளர்கள் கடுமையான மற்றும் இணக்கமற்ற முடிவுகளை எடுத்து வருகின்றனர்.

தனியார் நிறுவனங்களுக்கு கிடுக்கிப்பிடி உத்தரவுகள் பிறப்பிக்கப்படாததால் தினசரி ஆயிரக்கணக்கான ஊழியர்கள் தங்களது பணியையும், வருமானத்தையும் இழந்து வருகிறார்கள். இது மராட்டிய அரசின் விதிமுறைகளை முழுமையாக மீறும் செயலாகும்.

இதுபோன்ற சோதனைக் காலங்களில் நாட்டில் ஊழியர்களின் பணியைப் பாதுகாக்க நிறுவனங்களுக்கு அரசு தேவையான உத்தரவு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும்.

மகாராஷ்டிராவில் 6 லட்சத்துக்கும் மேற்பட்ட ஐ.டி., ஐ.டி.எஸ், பி.பி.ஓ., கே.பி.ஓ. நிறுவனங்களின் பணிபுரியும் ஊழியர்களின் பணி, வாழ்க்கை மற்றும் குடும்பத்தைப் பாதுகாக்க இந்த பிரச்சினையில் மாநில அரசு உடனடியாகத் தலையிட வேண்டும்.– இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், 68 ஆயிரம் ஊழியர்கள் சட்ட விரோதமாக பணி நீக்கம், ஊதியம் குறைப்பு, கட்டாயப்படுத்தி பதவி விலகச் செய்ய வைத்தது, கட்டாய விடுப்பில் அனுப்பியது தொடர்பாக தொழிலாளர் ஆணையர்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகளிடம் மனு தாக்கல் செய்துள்ளதாகவும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

# கொரோனா வைத்தியசாலையில் தீ விபத்து; 5 பேர் உயிரிழந்தனர்

பங்களாதேஷில் கொரோனா வைரஸ் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக அமைக்கப்பட்ட தனிப் பிரிவில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

கொரோனா வைரஸ் பரவியதையடுத்து தலைநகர் டாக்காவில் உள்ள குல்சான் சந்தைப் பகுதியில் உள்ள வைத்தியசாலையில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காக தரை தளத்தில் தனிப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

அங்கு கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. நேற்று இரவு இந்த கொரோனா தனி பிரிவில் திடீரெனத் தீ விபத்து ஏற்பட்டது. உடனே தீயணைப்பு வீரர்கள் அங்கு விரைந்து தீயை அணைத்து மீட்புப் பணி யில் ஈடுபட்டனர். அப்போது ஒரு பெண் உள்பட 5 பேரின் உடல்கள் மீட்கப் பட்டன. ஏ.சி. வெடித்து தீ பரவியதால் 5 பேர் உயிரிழந் தனர் என்று தகவல்கள் கூறுகின்றன.

ஆனாலும் தீ விபத்துக்கான சரியான காரணம் தெரியவில்லை. உயிரிழந்த வர்கள் கொரோனா வைரஸ் பாதித்த நபர்களா? அல்லது வேறு நபர்களா? என்பது பற்றியும் தகவல் தெரிவிக்கப்படவில்லை.

**பங்களாதேஷில் சம்பவம்**



## எவரெஸ்ட் மலை உயரத்தை மீண்டும் அளக்கின்றது சீனா

**நேபாளத்துடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால்**



எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் எவ்வளவு என்பதில் சீனாவுக்கும், நேபாளத்துக்கும் இடையே வேறுபாடு நிலவுகிறது. எனவே சீனா எவரெஸ்ட் சிகரத்தை மீண்டும் அளவிடுவதற்கு ஒரு குழுவை அனுப்பி உள்ளது.

எவரெஸ்ட் சிகரத்தின் அளவு 8844.43 மீற்றர் என்று சீனா சொல்கிறது. நேபாளமோ அதில் இருந்து 4 மீற்றர் உயரத்தைக் குறைத்துச் சொல்கிறது. இதனால் எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் எவ்வளவு என்பதில் சீனாவுக்கும், நேபாளத்துக்கும் இடையே வேறுபாடு நிலவுகிறது.

எனவே சீனா எவரெஸ்ட் சிகரத்தை மீண்டும் அளவிடுவதற்கு ஒரு குழுவை அனுப்பி உள்ளது. அந்தக் குழு திபெத் வழியாக நேற்று அங்கு சென்று அடைந்தது.

இந்த குழு பனிமூடிய சிகரத்தில் கணக்கீடு செய்வதற்காக ஒரு மார்க்கரை அமைக்க தொடங்கினர்.

ஏற்கனவே சீன குழுவினர் 1975இல் இரு முறை அளவிட்டு எவரெஸ்ட் சிகரத்தின் உயரம் 8848.13 மீற்றர் என்றும், 2005இல் அளவிட்டு 8844.43 மீற்றர் என்றும் கூறியது நினைவுகூரத்தக்கது.

இதற்கிடையே எவரெஸ்ட் சிகரத்தில் இரண்டு 5ஜி நிலையங்களை உருவாக்க சீனநிறுவனமான ஹூவாய், சீனா மொபைலுடன் இணைந்து செயல்படுவது குறிப்பிடத்தக்கது.

## உலகம் முழுவதும் தொற்று 58 லட்சத்தை எட்டுகின்றது

உலகம் முழுவதும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 58 லட்சத்தை நெருங்கி உள்ள நிலையில், 3.57 லட்சம் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இன்றைய நிலவரப்படி உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 57 லட்சத்து 94 ஆயிரமாக இருந்தது. நெருங்கி உள்ளது. அமெரிக்கா, பிரேசில், ரஷியா, பிரிட்டன், இந்தியா உள்ளிட்ட 12 நாடுகளில் பாதிப்பு ஒரு லட்சத்தை கடந்துள்ளது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 25 லட்சத்தை நெருங்குகிறது. 3.57 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 29.33 லட்சம் பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப் பட்டுள்ளனர். இவர்களில் சுமார் 53 ஆயிரம் பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா பாதிப்பில் அமெரிக்கா தொடர்ந்து உச்சத்தில் உள்ளது. இன்றைய நிலவரப்படி அமெரிக்காவில் 17 லட்சத்து 45 ஆயரத்து 803 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது உயிரிழப்பு எண்ணிக்கை1 லட்சத்து 2 ஆயிரத்து 107 ஆக உயர்ந்துள்ளது.

## சமூக விலகலைக் கடைப்பிடிக்க அமெரிக்காவில் உதவும் ரோபோ



அமெரிக்காவின் பிரிஸ்கோ நகரில் பொதுமக்கள் சமூக விலகலை கடைப்பிடிப்பதற்கு உதவி செய்யும் விநியோக ரோபோக்கள் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன.

கொரோனா வைரஸ் பரவலாமல் இருக்க சமூக விலகல்தான் தற்போதைக்கு ஒரே தீர்வாகக் கருதப்படுகிறது.

இதற்காக ஊரடங்கு விதிக்கப்பட்டு பொதுமக்கள் வீடுகளில் முடக்கப்பட்டுள்ளனர். வைரஸ் பரவல் குறையத் தொடங்கியதும் ஊரடங்கு தளர்வுகள் அறிவிக்கப்படுகின்றன. எனினும் வைரசின் தாக்கம் எத்தனை நாள்கள் இருக்கும் என்பதை யாராலும் கணிக்க முடியாது.

எனவே, சமூக விலகலை கடைப்பிடிப்பது நம் வாழ்வின் ஒரு அங்கமாகவே மாறிவிட்டது. இதற்காக பல்வேறு பகுதிகளில் தொழில்நுட்பம் சார்ந்த வழிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. குறிப்பாக ரோபோக்களின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கி உள்ளது.

அவ்வகையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாநிலம் பிரிஸ்கோ நகரில், பொதுமக்கள் சமூக விலகலைக் கடைப்பிடிப்பதற்கு ரோபோக்கள் உதவி செய்கின்றன. நோய் பரவலை கட்டுப்படுத்தவும், மக்கள் வெளியில் சென்று பொருள்கள் வாங்குவதை தவிர்க்கவும் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ரோபோக்களை ஒரு நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது.

பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களுக்குக் கொள்முதல் கட்டளை வழங்கினால், இந்த ரோபோக்கள் மூலம் குறிப்பிட்ட நேரத்தில் வீடுகளுக்கே பொருள்கள் விநியோகிக்கப்படுகின்றன. இந்த ரோபோக்கள் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளன.

பொதுமக்கள் சமூக விலகலை கடைப்பிடிப்பதற்கு இந்த ரோபோக்கள் உதவுவதுடன், கொரோனா காலம் முடிந்த பிறகும் வர்த்தக திட்டங்களுக்கு இந்த ரோபோக்கள் உதவும் என வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

# விமானங்களில் பறக்கும்போது கொரோனா வைரஸ் பரவுமா?

விமானங்களில் பறக்கிறபோது கொரோனா வைரஸ் பரவுமா என்ற கேள்விக்கு அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் பதில் அளித்துள்ளது.

விமானங்களில் பறக்கிறபோது கொரோனா வைரஸ் பரவுமா என்ற கேள்விக்கும், விமான பயணங்களின் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் பதில் அளித்துள்ளது.

கண்ணுக்கு தெரியாத கொரோனா வைரஸ் ஒரு பக்கம் பரவிக்கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம் தொடர் ஊரடங்கால் முடங்கிப்போன பொருளாதார நடவடிக்கைகளை பல நாடுகளும் திறந்து விடத்தொடங்கி உள்ளன. ஆனாலும் அமெரிக்கா போன்ற பல நாடுகளில் இன்னும் விமான போக்குவரத்து தொடங்கவில்லை.

சில நாடுகளில் அத்யாவசிய பணிகளுக்கும், சரக்கு போக்குவரத்துக்கும் விமானங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நிலையில், கொரோனா வைரஸ் விமானங்களில் பறக்கிறபோது பரவுமா என்ற கேள்வி எழுகிறது.

விமானங்களில் பறக்கிறபோது பெரும்பாலும் வைரஸ்களும், பிற கிருமிகளும் எளிதில் பரவுவதில்லை.

இந்த பதிலைத் தருவது அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் (சிடிசி) ஆகும். அதே நேரத்தில் விமானங்களில் பயணிக்கிறவர்கள் இறங்கிய உடனேயே 14 நாள்கள் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் இந்த மையம் பரிந்துரை செய்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவி வருகிற நிலையில், விமானத்தில் பறக்கிறவர்கள் ஆபத்து இல்லாதவர்கள் என்று கூற முடியாது. எனவே முடிந்தவரை விமானப் பயணங்களைத் தவிர்க்க வேண்டும். விமான பயணத்தின்போது, விமான நிலையங்களில் கூடுதல் நேரம் செலவு செய்ய வேண்டியதிருக்கிறது. இது பயணிகளை மற்றவர்களுடன் நெருங்கிய தொடர்புக்கு வழிநடத்துகிறது. மற்றவர்கள் தொட்ட மேற்பரப்புகளையும் தொட வேண்டியது வரும்.

மக்கள் நெரிசல் மிகுந்த விமானங்களில், தனி



மனித இடைவெளியை கடைப்பிடிப்பது என்பது மிகவும் கடினம். 6 அடி தொலைவுக்குள் உட்கார வேண்டி வரலாம். மணிக்கணக்கில் உட்காரும் நிலை இருக்கும். இது கொரோனா வைரஸ் பரவுவதற்கான ஆபத்தை அதிகரிக்கும். இவ்வாறு அமெரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் அறிவுறுத்தி இருக்கிறது.



# மற்றொரு விமானம் பெல்ஜியத்தில் இருந்து மத்தளவுக்கு வருகை

*மற்றொரு போயிங் 737 - 800 ரக சிறப்பு விமானம் பெல்ஜியத்தின் இருந்து மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு இன்று காலை 43 பயணிகளுடன் வந்தடைந்தது.*

*தெற்கு இலங்கையின் காலி துறைமுகத்தில் நங்கூரமிடப்படுள்ள சொகுசு சுற்றுலாக் கப்பல் பணியாளர் குழுவினரை அழைத்துச் செல்வதற்காகவே இந்த விமானம் இங்கு வந்தது.*

*திரும்பி செல்லும்போது கப்பலில் ஏற்கனவே இருந்த 35 கப்பல் பணியாளர்கள் விமானத்தில் தமது தாயகம் புறப்பட்டனர்.*

# சொத்து வரி இரு வருடங்களுக்கு அதிகரிக்காமலிருக்கத் தீர்மானம்

சொத்து வரியை இரண்டு வருடங்களுக்கு அதிகரிக்காமலிருக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பு இன்று இடம்பெற்றது.

இதில் கருத்து வெளியிடும்போதே அமைச்சர் பந்துல குணவர்த்தன இதனை தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக சகல ஆளுநருக்கும் அறிவிக்கப்படவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்த்தன இதன்போது தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikathir

பாய் மரக் கப்பல்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு



சித்திரப்போட்டி

நாளைய (29.05.2020) தலைப்பு
பாய் மரக்கப்பல்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# யாழ் மாவட்டத்தில் பொது சந்தைகள் அனைத்தும் திங்களன்று திறக்கப்படும்

## யாழ். அரச அதிபர் தகவல்



யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து பொது சந்தைகளும் எதிர்வரும் திங்கட்கிழமை மக்கள் பயன்பாட்டுக்காக மீளத் திறக்கப்படவுள்ளன என யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமைகள் தொடர்பில் இன்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அரசாங்க அதிபர் இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் மாவட்டத்தில் தற்பொழுது இயல்பு நிலை படிப்படியாக திரும்பிக் கொண்டிருக்கும் நிலையில் பொதுச்சந்தைகளையும் திறப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என பலராலும் கோரப்பட்டுள்ளது. இதுதொடர்பாக ஆளுநரும் சிலபணிப்புரைகளையும் அறிவுறுத்தல்களையும் விடுத்திருக்கின்றார்.

அதனடிப்படையில் யாழில் முக்கியமான சந்தைகள் அமைந்திருக்கின்ற பிரதேச சபையினர், உள்ளூராட்சி அதிகார சபையின் அதிகாரிகளுடனும் கலந்துரையாடல் ஒன்றினை மேற்கொண்டிருந்தோம். அதனடிப்படையில் தங்களுடைய சந்தை தொகுதிகளை உரிய சுகாதார நடைமுறைகளுக்கு அமைய அவற்றை மீளத் திறப்பது தொடர்பான நடவடிக்கைக்ளை அவர்கள் தற்போது மேற்கொண்டு வருகின்றார்கள்.

அநேகமாக எதிர்வரும் திங்கட்கிழமை அளவில்– அதாவது ஜூன் மாதம் முதலாம் திகதிக்கு பிற்பாடு – இவற்றை அந்த இடங்களிலே திறந்து செயல்படுத்தக்கூடியதாக இருக்கும். அதே நேரத்தில் சுகாதார ஒழுங்கு விதிகளை வியாபாரிகளும் அங்கு செல்லும் பொது மக்களும் பின்பற்ற வேண்டியது கட்டாயமாகும்.

ஒவ்வொரு உள்ளூர் அதிகார சபையினருக்கும் சில விடயங்களைக் கூறியிருக்கின்றோம். தத்தமது பகுதி பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார பரிசோதகர்களின் அறிவுறுத்தல் அல்லது அவர்களுடைய கண்காணிப்பின் கீழ் இந்தச் சந்தைகளை இயக்குவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்குமாறு அந்தந்தப் பிரதேச செயலர்கள்டம் கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் சந்தைகள் யாவும் வழமை போன்று மக்களுக்கு சேவையாற்ற திறக்கப்படவுள்ளன.

அத்தோடு பொதுமக்கள் சுகாதார நடைமுறையினையும் சமூக இடைவெளியையும் பின்பற்றி சந்தைகளைப் பயன்படுத்திக் கொள்ளுமாறும் நான் கோரிக்கை விடுகின்றேன்.– என குறிப்பிட்டார் .

**வெறிச்சோடிய நிலையில் காணப்படும் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம். பயணிகள் புறப்படுகை பகுதியை கீழுள்ள படங்களில் காணலாம்.**









# கதிர்காமம் பாத யாத்திரை யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்







யாழ்ப்பாணம், மே 28

தொண்டமனாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்திலிருந்து கதிர்காமக் கந்தன் ஆலயத்தை நோக்கிப் பாத யாத்திரை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செல்வசந்நிதி முருகன் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை நடைபெற்ற சிறப்பு வழிபாடுகளைத் தொடர்ந்து ஆலயக் கப்புறாளையால் யாத்திரைக்குத் தலைமை தாக்கிச் செல்லவுள்ள அடியவரின் கையில் முருகப் பெருமானின் வேல் கையளிக்கப்பட்டது.

வேலைப் பெற்றுக்கொண்ட அடியவர்கள் கதிர்காமம் நோக்கிய பாத யாத்திரையை ஆரம்பித்தனர்.

இந்த யாத்திரை குழுவினர் எதிர்வரும் 4ஆம் திகதி விசாகம் அன்று முல்லைத்தீவு வற்றாப்பளை அம்மன் ஆலயத்தில் நடைபெறும் சிறப்புப் பொங்கல் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர். பின்னர் அங்கிருந்து கதிர்காமம் நோக்கி பாத யாத்திரையாகச் சுமார் 46 நாள்கள் சென்று கதிர்காம கந்தனின் கொடியேற்ற தினத்தன்று ஆலயத்தை சென்றடையவுள்ளனர்.

இம்முறை கொரோனோ அச்சுறுத்தல் காரணமாக யாத்திரை தடைப்படும் என எதிர்ப்பார்த்தபோதிலும் முருகப் பெருமானின் அருளால் இம்முறை யாத்திரை தடங்கல் இன்றி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

# ஆறுமுகன் தொண்டமானுக்கு நாடாளுமன்ற வளவில் அஞ்சலி









கொழும்பு, மே 28

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானின் பூதவுடலுக்கு நாடாளுமன்ற வளாகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இன்று முற்பகல் 11.10 மணியளவில் மறைந்த அமைச்சர் தொண்டமானின் பூதவுடல் பாதுகாப்புக்கு மத்தியில் நாடாளுமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச, முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, முன்னாள் பிரதிச் சபாநாயகர், முன்னாள் குழுக்களின் பிரதித் தவிசாளர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் ஆகியோர் உடல் ஏந்திய பேழையைப் பொறுப்பேற்று, நாடாளுமன்ற ஒன்றுகூடல் மண்டபத்துக்கு அரச மரியாதையுடன் எடுத்துச் சென்றனர்.

அதன்பின்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய அரசியல் கட்சிகளின் தலைவர்கள், அமைச்சர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

நாடாளுமன்றத்தைச் சூழ வெள்ளைக்கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன. சுகாதார நடைமுறை மற்றும் சமூக இடைவெளியைப் பின்பற்றியே அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இரா.சம்பந்தன், இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழீழ மக்கள் விடுதலை கழகம் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன், தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன் மற்றும், ரிசாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம், காதர் மஸ்தான், மனோ கணேசன், பழநி திகாம்பரம், மயில்வாகனம் திலகராஜ் உள்ளிட்டவர்கள் அஞ்சலி செலுத்தினர்.











# ஆயிரம் ரூபா சம்பள உயர்வைத்தான் சாக முன் நேரில் கோரினார் தொண்டா



தோட்டத் தொழிலாளர்களுக்கு விரைவில் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஆறுமுகன் தொண்டமான் தன்னிடம் இறுதியாக கேட்ட விடயமும் இதுதான் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## அது நிறைவேற்றப்படும் எனப் பிரதமர் மஹிந்த உறுதி

நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போதே அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நேற்று முன்தினம் அவர் காலமாகுவதற்கு முன்னதாகத் தன்னைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தமையைப் பிரதமர் இதன்போது நினைவு கூர்ந்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,000 ரூபாய் சம்பளம் வழங்க வேண்டும், ஈ.பி.எவ். கொடுப்பனவு பற்றி பேசினார். இதை பேசி சிறிது நேரத்தின் பின்னர் அவர் உயிரிழந்து விட்டார் எனவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் அவரது இந்த இரண்டு கோரிக்கைகளையும் விரைவில் நிறைவேற்ற வேண்டும் எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

## கொரோனா குறித்து போலிப்பிரசாரம் விசாரணைகளுக்காகக் குழு நியமனம்

கொழும்பு, மே 28

கொரோனா குறித்து சமூக வலைத்தளங்களில் போலிப்பிரசாரங்களை முன்னெடுப்பவர்கள் தொடர்பான விசாரணைகளுக்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களில் போலிப்பிரசாரங்களைப் பரப்பிய சுமார் 400 சம்பவங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான போலித்தகவல்களை பரப்புவது தொடர்பில் இதுவரை 16 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

பொலிஸார் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுவரை கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் வைத்தியர்கள், பல்கலைக்கழக நிர்வாக உறுப்பினர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர் ஒருவரும் அடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதில் முறைகேடு

### விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, மே 28

கொரோனா தொற்று பரவியதை அடுத்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட்டதில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கணக்காய்வாளர் நாயகம் விக்ரமரத்ன இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் 3 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும், கிடைத்துள்ள முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து ஊடகங்கள் ஊடாக வெளியான பிரச்சினைகளுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், கொடுப்பனவு விடயத்தில் ஏதேனும் முறைப்பாடுகள் காணப்படுமாயின், www.auditorgeneral.gov.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து முறைப்பாடுகளைப் பதிவிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் பிரதிக் கணக்காய்வாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## தொண்டமானுக்கு இன்று வவுனியாவில் அஞ்சலி!

வவுனியா, மே 28

மறைந்த முன்னாள் அமைச்சரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான ஆறுமுகம் தொண்டமானுக்கு வவுனியாவில் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

சிதம்பரபுரம் மக்களின் ஏற்பாட்டில் சிவகாந்தன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில், அன்னாரது உருவப் படத்துக்கு நினைவுச் சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் பிரதேசசபை உறுப்பினர் சுரேஸ், பழனி முருகன் ஆலயத்தலைவர் மாதவன், கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்களான மகேந்திரன், செல்வம், பெண்கள் அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி மல்லிகா ஆகியோர் கலந்துகொண்டனர்.



## போதை வில்லைகளுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, மே 28

போதை வில்லைகளுடன் சந்தேகநபர் ஒருவர் களனி புலுகங்க பகுதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபரிடமிருந்து ஆறு கோடி ரூபா பெறுமதியான ஆயிரத்து 900 போதை வில்லைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

களனி பிராந்திய குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இந்தச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடமிருந்து 3 கிராம் 360 மில்லிகிராம் ஹெரோயினும் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுபாகபியகம பகுதியிலும் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, 3 கிராம் 120 மில்லிகிராம் ஹெரோயினுடன் சொகுசுக் கார் ஒன்றுடன் மற்றொரு சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

## மன்னார் கட்டுக்கரை குள நீர் திறந்து விடப்பட்டது



மன்னார் – கட்டுக்கரை குளத்தின் கீழான சிறுபோக நெற் செய்கைக்கான நீர் விநியோகம் நேற்று புதன்கிழமை காலை வைபவரீதியாக சமையத்தலைவர்களின் ஆசியோடு 11 ஆம் கட்டை வாய்க்கால் துருசில் சம்பிரதாய முறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

காலை 9.30 மணிக்கு மன்னார் மாவட்ட நீர்ப்பாசன பணிப்பாளர் நடராசா யோகராசா தலைமையில் இந்த நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

நீர்ப்பாசன பொறியியலாளர்கள், சமயத் தலைவர்கள், கட்டுக்கரைக் குளத்தின் வாய்கால் அமைப்பு பிரதிநிதிகள், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், திணைக்கள அதிகாரிகள், விவசாய அமைப்பக்களின் பெண் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





## அலுவலகங்களில் அரைவாசிக்கு மேற்படாதவாறு பணியாளாகளை பணிக்கு அமாத்தக் கோரிக்கை!

கொழும்பு, மே 28

பொதுமற்றும்தனியார் நிறுவனபணியாளர்களில் மூன்றில் ஒரு பங்கினா அல்லது அரைப் பங்கினரைப் பணியில் ஈடுபடுத்துமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் இன்னும் 100 வீதம் கட்டுப்பாடுகள் தளாத்தப்படவில்லை. முழுமையான கட்டுப்பாடு களைத் தளாத்தும் இலக்கை நோக்கியே நாடு நகாந்து வருகிறது எனவும் அவா குறிப்பிட்டுள்ளாா.

இந்த நேரத்தில் அனைத்து அரச மற்றும் தனியாா் நிறுவனங்களும் தங்கள் முழுப் பணியாளா்களில் மூன்றில் ஒரு பங்கினரை அல்லது அரைவாசித் தொகையினரைப் பணியில் அமா்த்துமாறு கேட்டுக்கொள்வதாக சுகாதார சேவைகள் பணிப்பாளா் நாயகம் மேலும் கூறினாா்.

அனைத்து சுகாதார வழிகாட்டுதல்களையும் அனைத்து அரச மற்றும் தனியாா் நிறுவனங்களால் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் எனவும் அவா கேட்டுள்ளாா்.

நிறுவனங்கள் சுகாதார வழிகாட்டுதல்களைச் சுகாதார அமைச்சின் வலைத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம். சமூக நிகழ்வுகள் போன்றவற்றுக்கான கூடுதல் வழிகாட்டுதல்கள் அடுத்த சில நாட்களில் அறிவிக்கப்படவுள்ளன எனவும் அவா மேலும் தெரிவித்தாா்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.05.2020 இல் வெளியிடப்பெற்றது.